1993 மார்ச் 23] [பேரவைத்தலைவர்]

தானே சொல்லுகிறீர்கள்? (குறுக்கீடு) நான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி. ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் ?

திருமதி. ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே மாத்திரம் ஏறத்தாழ $1\frac{1}{2}$ இலட்சம் மக்கள் இந்தியைத் தனியாகப் படித்து, பிராத்தமிக், மத்யமா போன்ற பரிட்சைகளை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே விவாதம் வேண்டாம். அவருக்குச் சொன்னதுதானே உங்களுக்கும்?

6. கவன ஈர்ப்பு

(அ) அரசுப் பள்ளிகளில் ஏற்பட்டுள்ள காலியிடப் பணிகளில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள் திருவாளர்கள் ஆர். சிங்காரம், சி. சுவாமிநாதன், இரா. தாமரைக்கனி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “அரசுப் பள்ளிகளில் ஏற்பட்டுள்ள காலியிடப் பணிகளில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டியது குறித்து” மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[டாக்டர் செ. அரங்கநாயம்] [1993 மார்ச் 23

அறிக்கை

தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆண்டு தோறும் 2 இலட்சம் மாணவ/மாணவியர்கள் கூடுதலாக சேர்க்கப்படுகின்றனர். அவ்வாறு சேர்க்கப்படும் மாணவ/மாணவியருக்கு கற்பிப்பதற்காக அதிகமாக ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். அரசின் நிதிநிலைமைக்கேற்ப இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் பகுதி-2 திட்டத்தின் கீழ் தோற்றுமிக்கப்பட்டு வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் அவ்வாறு தோற்றுவிக்கப்பட்டு வரும் இடைநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை வருமாறு :—

1)	1990–91	1200
(2)	1991–92	1200
(3)	1992–93	882
(4)	1993–94	269

ஆசிரியர் பற்றாக்குறை ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாகும் நிலை ஏற்பட்டுள்ளது. கடுமையான நிதிப்பற்றாக்குறையிருப்பினும், மேற்கண்டவாறு பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதால் ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவுக்கு ஈடுகட்டப்பட்டு வருகிறது. மேலும் காலிபணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்புவற்கும் வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உயர்நிலை/மேல்நிலைப்பள்ளி :

உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள பி.டி. கிரேடு ஆசிரியர்கள் மற்றும் முதுநிலை ஆசிரியர்கள் காலியிடங்கள் ஆசிரியர் தேர்வாணையம் மூலம் வழங்கப்படும் பட்டியலிருந்து அவ்வப்பொழுது நிரப்பப்பட்டு வருகின்றன. மேலும் பல்வேறு பள்ளிகளில் உபரியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை கண்டறிந்து அவைகளை ஆசிரியர் பணியிடங்கள் தேவையான பள்ளிகளுக்கு மாற்றியும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதைத்தவிர ஆண்டுதோறும் பகுதி-2 திட்டத்தின் கீழ் அரசு நிதி நிலைக்கேற்ப கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்படுகின்றன. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள பி.டி. கிரேடு (தமிழாசிரியர் உட்பட) ஆசிரியர்கள் மற்றும்

1993 மார்ச் 23] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

முதுநிலை ஆசிரியர்கள் பணியிடங்கள் கடந்த 3 ஆண்டுகளில் (பகுதி-2 திட்டத்தின் கீழ்) கீழ்க்கண்டவாறு தோற்றுவிக்கப்பட்டுள்ளது:—

1990–91	.. ..	419
1991–92	.. ..	250
1992–93	.. ..	17

மேலே விவரிக்கப்பட்ட சூழ்நிலையில் அரசு தமிழகத்தில் தொடக்கப்பள்ளிகளிலும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் ஏற்பட்டுள்ள ஆசிரியர் பற்றாக்குறையினை போக்க தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்தேன். வருகின்ற ஆண்டிலே, விரைவிலே பணியிடங்களைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கின்றார்கள். அதை நான் வரவேற்கின்றேன். ஆனால், அதே நேரத்தில் கிராமப்புறங்களிலே இருக்கின்ற பள்ளிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பது இரண்டு, மூன்று வருடங்களாகவே, 1989-ஆம் ஆண்டிலிருந்தே பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. இது குறித்துப் பல்வேறு நேரங்களிலே இதற்கு முன்னால் இருந்த அரசுக்கு தெரிவித்திருக்கிறோம். அவர்களும் எந்தவித நியமனமும் செய்யவில்லை. அதே நேரத்தில் இது குறித்து இந்த அரசுக்கும் பல நேரங்களில் எடுத்துச் சொல்லியும், தற்போது நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட ஆசிரியர் தேர்வாணைக் குழுவிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும், விரைவில் அவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கின்றேன். அதே நேரத்தில் நகர்ப் புறங்களிலே எல்லாம் பள்ளி மாணவர்கள் படிப்பதற்குப் பல்வேறு சாத்தியக் கூறுகள், வசதிகள், வாய்ப்புகள், சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆனால் கிராமத்திலே உள்ள மாணவர்கள் படிப்பதற்கு, நகர மக்களோடு போட்டியிடுவதற்கு வாய்ப்பு வசதி இல்லாத காரணத்தினால், பள்ளிகளில் முழுமையான அளவு ஆசிரியர்களை நியமித்து Coaching மிகச் சிறப்பான முறையில் கொடுப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிற அதே நேரத்தில் அந்த விரைவில் அரசு பரிசீலிக்குமா என்றும் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கின்ற முறையானது சரியாக இல்லாமல் இருந்தது. அந்த ஆசிரியர்களுடைய தகுதி, திறமைகளைப் பரிசோதிக்காமலேயே நியமனம் செய்யப்படுகின்ற ஒரு முறையைப் பின்பற்றி வந்தார்கள். ஆகவே கிராமப்புறங்களிலே படிக்கின்ற அந்த மாணவர்களுக்கு தரமுள்ள நல்ல ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கருதி, அந்த ஆசிரியர்களை நியமிக்கும் பொறுப்பை இந்த அரசானது ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் விட்டு இருக்கிறது. அவர்கள் அது குறித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். விரைவிலே விளம்பரம் வரும். அதற்கான சிறப்புத் தேர்வு நடைபெறும். ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு காலியாக உள்ள பணியிடங்களிலே நிரப்பப்படுவார்கள்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் , அவர்களுடைய விவர அறிக்கையில் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் மாணவர்கள் புதிதாக பள்ளிகளில் வந்து சேருகிறார்கள் இதற்கு முன்பும் தமிழகத்தில் ஏறத்தாழ 25 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அந்தச் சூழ்நிலையில் 1993–94 ஆம் ஆண்டுக்கு, மாண்புமிகு கல்வி அமைச்சருடைய அறிக்கையில் 269 ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். புதிதாக ஆரம்பப் பள்ளிகள் இந்த ஆண்டு தமிழகத்தில் எத்தனை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ? அதற்கு ஆசிரியர் நியமனம் செய்து விட்டீர்களா ? 269 ஆசிரியர்களை வைத்து இந்த ஆண்டு, இந்த நெருக்கடியான ஆசிரியர்கள் பற்றாக்குறையை அரசு எப்படிப் போக்கப்போகிறது என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 269 என்பது புதிய ஆசிரியர் பணியிடங்கள். அவர்கள் புதிய ஆரம்பப் பள்ளிகளிலே நியமிக்கப்பட இருக்கிறார்கள். காலியாக இருக்கிற பணியிடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

முற்பகல் 11-50

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு இனிய பேரவைத் தலைவர் அவர்களே, (சிரிப்பு), அரசு பள்ளிகளில், பஞ்சாயத்து யூனியனிக்கு ஒதுக்கப்பட்ட பள்ளிகளில், இரண்டு ஆண்டு காலமாக ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அது தான் சரி.

1993 மார்ச் 23] [திரு. இரா. தாமரைக்கனி]

ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு மறுபடியும் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் இப்பொழுது ஒன்றும் ஒன்றும் இரண்டு, இரண்டும் ஒன்றும் மூன்று (சிரிப்பு) இப்படி மூன்றாவது வகுப்புவரை ஒரே ஆசிரியர் சொல்லிக் கொண்டிருந்தால் அந்தக் குழந்தைகள் எப்படிப் படிக்கும். தனியார் பள்ளிக் கூடத்திற்குத் தான் போகும். ஆகவே, இதையெல்லாம் அறிந்து தேர்வாணைக் குழு மூலமாக ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதை விட்டுவிட்டு, எம்பளாய்மெண்ட் மூலமாக மாண்புமிகு கல்வி அமைச்சரும், மாண்புமிகு முதல் அமைச்சரும், நேரிடையாக தெரிவுசெய்ய ஆவன செய்யப் படுமா? அரசாங்கத்தில் நிதிப் பற்றாக்குறை இருந்தால், அரசு பள்ளிகளை தனியாரிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தாமரைக்கனி பல அரிய கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். (சிரிப்பு) அவைகளையெல்லாம் பரிசீலிக்கலாம். ஆனால் ஆசிரியர் நியமனத்தைப் பொறுத்தமட்டில் தேர்வாணைக் குழு என்பது, அதற்கென சிறப்பானத் தகுதி படைத்தவர்களை நியமித்து, ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியின் கீழே அந்தக் குழுவை அமைத்திருக்கிறோம். விருப்பு வெறுப்பு இல்லாமல், சிறந்த முறையிலே அவர்கள் தேர்ந்தெடுத்து, நல்ல ஆசிரியர்களை நம்முடைய பள்ளிகளுக்கு தரவேண்டும். ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிறபோது வேறு எந்தப் பிரச்சினைகளும் அதிலே வரக் கூடாது என்பதிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கவனமாக இருக்கிறார்கள்.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் புகளூர் சர்க்கரை ஆலையில் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு திரு.ம. சின்னசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருச்சிராப்பள்ளி மாவட்டம் புகளூர் சர்க்கரை ஆலையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது குறித்து'' மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.